[22nd April 1959

மொத்தம் 15 லட்சம் ரூபாய் ஆகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது, இந்த 15 லட்சம் ரூபாயையும் ஹரிஜன இலாகாவிலிருந்து கொடுத்தால் ஒரே வருஷத்தில் கொடுத்து விடலாம். ஒரு வருஷத்தில் இரண்டு லட்சம் என்று கொடுப்பதால் படிப்படியாக பல வருஷங்களில் போட்டு விடலாம் என்று கருதப்படுகிறது. பஞ்சாயத்துப் பகுதிகளுக்கும் மின்சாரம் விஸ்தரிக்கப்பட வேண்டுமானால் அந்தப் பகுதியிலுள்ள சேரிகளையும் அத்துடன் சேர்த்தால் தான் அங்கேயும் மின்சாரத்தை விஸ்தரித்துக் கொடுக்கலாம் என்று நிச்சயமாக ஒரு முடிவு செய்திருக்கிறோம்.

SRI R. SUBRAMANIAM: ஹரிஜனக்கு வருஷம் ஒன்றுக்கு 15 லட்சம் ரூபாய் என்று ஒதுக்கப்பட்டு வருஷம் ஒன்றுக்கு 1·5 லட்சம் ரூபாய் செலவழிக்கப்படும் என்று கண்டிருக்கிறது. இதன்படி 1·5 லட்சம் வீதம் பத்து வருஷத்தில் 15 லட்சம் செலவழிப்பதாக ஆகும் அப்படி இல்லாமல் வருஷம் ஒன்றுக்கு மூன்று லட்சம் ரூபாய் செலவு செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI V. RAMAIAH: ஹரிஜனங்களுக்கு மூன்று லட்சம் மட்டும் அல்ல, பத்து லட்சம் கூட செலவு செய்ய ஏற்பாடு செய்யலாம். அப்படி செலவு செய்யவும் தயாராக இருக்கிறோம்.

SRI P. G. MANICKAM: ஹரிஜன தெருக்களுக்கு மின்சார விளக்குகள் போட்டால் அதன் கர்ரன்ட் சார்ஜை பஞ்சாயத்து ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. அதனால் அந்தக் கர்ரன்ட் சார்ஜை ஹரிஜன நல இலாக்கா ஏற்றுக்கொள்ள வசதி செய்யப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH: அந்த நிலைமைக்கு நாம் போக வேண்டாம் என்று நான் கருதுகிறேன். ஆரம்பித்ததில் மின்சார விஸ்தரிப்பு கொடுக்கக்கூடிய நேரத்தில் ஏற்படக்கூடிய அதிகபட்ச பணத்தை சாதாரணமாக பஞ்சாயத்து கொடுக்க முடியாத காரணத்தால் ஹரிஜன இலாகாவிலிருந்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. கன்ஸ்யூமர்ஸ் கொடுக்க வேண்டிய தொகையை பஞ்சாயத்து பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

SRI M. S. SELVARAJAN: மின்சாரம் சப்ளை செய்வதில் குறைந்த பட்ச விகிதாச்சாரம் உண்டா ?

THE HON. SRI V. RAMAIAH: பொதுவாக குறைந்த பட்ச விகிதாச்சாரம் பத்து சத விகிதம் என்று வைத்துயிருக்கிறார்கள். அந்த முறையில் விநியோகிப்பதற்கு பத்து சதவிகிதம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

### *Oil Engines*

* 74 *Q.*—SRI V. K. RAMASWAMY MUDALIYAR (on behalf of SRI A. GOVINDASAMY): Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of oil engines in the South Arcot District Agricultural Office;

(*b*) the number of oil engines actually available for being hired to agriculturist; and

(*c*) the number of oil engines under repair?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Thirty-seven.

(*b*) Twenty-one.

(*c*) Sixteen.